**செய்தி வெளியீடு எண்: 497** **நாள்: 13.07.2020**

**தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை.**

**மறுப்பு அறிக்கை**

13.07.2020 தேதியிட்ட சில நாளிதழில் ஆவின் நிறுவனம் செயல்பாடுகள் குறித்து செய்தியில் பல விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை தவறான புள்ளிவிவரங்கள். அது குறித்து கீழ்க்கண்ட விளக்கத்தினை ஆவின் நிறுவனமாகிய தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தில் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் 230 இலட்சம் லிட்டர் பாலில், ஆவின் நிறுவனம் 40 இலட்சம் லிட்டர் அதாவது 17 சதவீதம் மட்டுமே கொள்முதல் செய்து வருகிறது. மீதமுள்ள 83 சதவீதம் பாலில், உள்ளூர் தேவைக்காக 17 சதவீதம் போக, 16 சதவீதம் தனியார் பால் நிறுவனங்கள் மூலமாகவும் 50 சதவீதம் அமைப்புசாரா விற்பனையாளர்கள் மூலமாகவும் கொள்முதல் செய்யப்படுகிறது.

மேலும் கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் நலனையும் அவர்களின் பொருளாதார தேவையினையும் கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்த பால் கொள்முதல் விலைப்பட்டியல் அடிப்படையில் தரத்திற்கேற்ற விலையில் பால் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது கொரோனா நோய் தொற்று மற்றும் ஊரடங்கு காலத்தில் இதர சில பால் நிறுவனங்கள் பால் கொள்முதலை குறைத்த நிலையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கு இணங்க தமிழ்நாடு முழுவதும் கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வண்ணம் அவர்கள் உற்பத்தி செய்யும் பாலினை ஆவின் தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறது.

கடந்த மூன்று மாதங்களில் பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி ஆவின் நிறுவனம் இலாப நோக்கு இல்லாமல் அவர்களை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இணைத்து தரமான பாலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.32 என்ற அடிப்படையில் கொள்முதல் செய்து வருகிறது. ஆவினின் சீரிய முயற்சியால் 155 புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டும், 139 செயலிழந்த சங்கங்களை புதுப்பிக்கப்பட்டும் தற்போது மொத்தம் 9,266 பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக முன்னர் நாளொன்றுக்கு 29 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் தற்போது நாளொன்றுக்கு 40.28 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. அதேபோல பால் விற்பனையும் கடந்த ஆண்டு நாளொன்றுக்கு 22.89 இலட்சம் லிட்டரிலிருந்து தற்போது 9.21 சதவீதம் உயர்ந்து, நாளொன்றுக்கு 25 இலட்சம் லிட்டராக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் கர்நாடகாவின் கொள்முதல் 88 இலட்சமாக உயர்ந்ததை பாராட்டி செய்தி வெளியிட்டு தமிழகத்தின் சாதனையை கேள்விக்குறியாக சில நாளிதழ்கள் வெளியிட்டுள்ளது. மேலும் ஆவின் நிறுவனத்தின் தொடர் முயற்சியின் காரணமாக 495 விற்பனை முகவர்கள் நியமித்தல், சோமாட்டோ, ஸ்விகி மற்றும் டன்சோ நிறுவனங்களின் மூலம் நுகர்வோர்களின் வீடுகளுக்கே சென்று பால் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளுதல் ஆகியன மூலம் கொள்முதல் செய்த பாலினை அதிகபட்சம் விற்பனை மேற்கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொரோனா காலத்திற்கு முன்னர், மாதம் ஒன்றுக்கு ரூ. 34.78 கோடி என்ற விற்பனை மதிப்பு தற்போது ரூ.41.15 கோடிக்கு உயர்ந்துள்ளது. ஊரடங்கால் அனைத்து மாநில கூட்டுறவு நிறுவனங்களின் விற்பனை குறைந்த நேரத்தில் மற்ற மாநில கூட்டுறவு நிறுவனங்களை விட தமிழகத்தின் ஆவின் நிறுவனம் இந்த குறுகிய மூன்று மாத காலத்தில் விற்பனையில் என்றும் இல்லாத அளவில் சாதனை செய்துள்ளது. இதனை, மே மாதத்தில் நடைப்பெற்ற மத்திய அரசின் பால்வளத்துறை காணொளி காட்சி கூட்டத்தில் ஆவின் நிறுவனத்தை பாராட்டியுள்ளது.

பால் கொள்முதல் உயர்ந்ததன் காரணமாக விற்பனைக்கு போக மீதமுள்ள உபரிப்பால் பால்பவுடராகவும் வெண்ணெயாகவும் உருமாற்றம் செய்யப்படுகிறது. தற்போது மாநில அளவில் மொத்தம் 8,400 மெ.டன் அளவில் பால்பவுடர் இருப்பில் உள்ளது. ஒரு வருடம் வரை இந்த பால்பவுடரை இருப்பு வைத்துக் கொள்ள இயலும். ஆனால், சில நாளிதழ்களில் 10,000 மெ.டன் என்றும் 6 மாதத்திற்குள் விற்பனை செய்துவிட வேண்டும் என்ற தவறான புள்ளிவிவரத்தை வெளியிட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் பால்பவுடரின் இருப்பு அதிகபட்சமாக 12,000 மெ.டன் வரையிலும் இருந்துள்ளது. தமிழகம் தவிர அதிக பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களான குஜராத் மற்றும் கர்நாடக மாநில பால் கூட்டுறவு இணையங்களில், கோவிட்–19 காலத்தில் பால் விற்பனை முறையே 11.64 சதவீதம் மற்றும் 23.25 சதவீதம் அளவிலும் குறைந்து பால்பவுடரின் இருப்பு அதிகரித்துள்ளது.

தற்போதைய பால்பவுடர் இருப்பு விவரம்:

| வ.எண் | பெயர் | இருப்பு அளவு சுமார் (மெ.டன்) |
|---|---|---|
| 1 | இந்தியா முழுவதும் | 1,70,000 |
| 2 | அமுல் | 80,000 |
| 3 | நந்தினி | 17,000 |
| 4 | ஆவின் | 8,400 |
| 5 | சரஸ் (இராஜஸ்தான்) | 15,000 |

நாளொன்றுக்கு பால்பவுடர் உருமாற்றம் செய்யும் பாலின் அளவு:

நந்தினி – 33 இலட்சம் லிட்டர்

ஆவின் – 12 இலட்சம் லிட்டர்

தற்போது நாளொன்றுக்கு இந்தியா முழுவதும் மொத்த கொள்முதல் 40 முதல் 45 சதவீதம் பால்பவுடராக உருமாற்றம் செய்யப்படுகிறது.

தேசிய அளவில் பால்பவுடரின் இருப்பு 1,70,000 மெ.டன் அளவிற்கு அதிகரித்துள்ளதால் அதன் விற்பனை விலை சரிந்துள்ளது. இந்த சூழ்நிலையில் பால்பவுடரை குறைந்த விலைக்கு விற்க முடியாத காரணத்தால் சந்தையில் தேவை அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்படும் பொழுது இருப்பு வைத்துள்ள பவுடரை விற்க இயலும். பால்பவுடர் இருப்பு வைத்துள்ளதால் ஆவினில் நஷ்டம் ஏற்படுவது தவிர்க்கப்பட வாய்ப்புள்ளது.

ஒரு சில நாளிதழில் ஆவின் பற்றிய மேற்கூறிய அதிக பால்பவுடர் இருப்பு பற்றி கேள்விக்குறியுடன் செய்தி தலைப்பு வெளியிட்டு, கர்நாடகாவின் நந்தினியின் பால்பவுடர் உற்பத்தி ஆவினை விட இருமடங்காக இருக்கும் நிலையில் அதை நந்தினி சாதனை என்று செய்தி தலைப்பிட்டு வெளியிட்டது பத்திரிக்கை/செய்திதாள்களின் பாரபட்சமின்றி செயல்படும் முறைக்கு மாறாக உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**